தனது 83–வது அகவையில் திடீரென மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இராமேஸ்வரத்தில் ஓர் ஏழைக் குடும்பத்திலே பிறந்து, தமது கடின உழைப்பினாலும், ஒருமுக சிந்தனையாலும், விடா முயற்சியாலும் சிறந்த விஞ்ஞானியாகத் திகழ்ந்ததோடு, அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்படும் குடியரசுத் தலைவராக விளங்கினார்.

குடியரசுத் தலைவராக இருந்தபோதும், அதன்பின்னரும், அவரது சிந்தனை எப்பொழுதும் மாணாக்கர்கள், இளைஞர்கள் ஆகியோரைப் பற்றியே இருந்தது. 2020 ஆம் ஆண்டுக்குள் இந்தியா வல்லரசாக வேண்டுமென்று கனவு கண்டவர். இந்தியா வல்லரசாக உருவெடுக்க மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கும்விதமாக, 'கனவு காணுங்கள்; அது உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்' என்றும், 'வெற்றி பெற வேண்டுமென்றால், பதட்டமில்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி' என்றும் வெற்றியின் இரகசியத்தை மாணாக்கர்களுக்குப் போதித்தார். இளைய தலைமுறையினரும், மாணாக்கர்களும் இந்தியாவின் வளர்ச்சிக்குச் சிறந்த பங்காற்றிட உந்துசக்தியாக விளங்கினார். அன்னாரது பிறந்த தினம் இளைஞர் எழுச்சி நாளாக தமிழக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரது நினைவைப் போற்றும்விதமாக, 'டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் விருது' சுதந்திரத் தினத்தன்று தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்ினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) திரு. பூ. செந்தூர் பாண்டியன், முன்னாள் அமைச்சர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பூ. செந்தூர் பாண்டியன், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மற்றும் தமிழக முன்னாள் அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 2011 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவரும், விவசாயக் குடும்பத்திலே

2015 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

பிறந்து தன்னை இளம் வயது முதல் பொது வாழ்வில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மக்களுக்காகப் பணியாற்றியவரும், 1986 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை செங்கோட்டை நகரமன்றத் துணைத் தலைவராக திறம்படப் பணியாற்றியவரும், ஜூலை 2011 முதல் மே 2015 வரை கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சராகவும், சுற்றுலாத் துறை அமைச்சராகவும் மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியவரும், இனிய பண்பும், எளிமையும் தன்னகத்தே கொண்டவரும், அனைவரிடத்திலும் நட்புறவோடும், அன்போடும் பழகியவருமான திரு. பூ. செந்தூர் பாண்டியன் அவர்கள் சிறிது காலம் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், 11–7–2015 அன்று தனது 64 ஆவது அகவையில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

முற்பகல் 10–15

(இ) திரு. எம்.எஸ். விஸ்வநாதன், இசையமைப்பாளர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.எஸ். விஸ்வநாதன், இசையமைப்பாளர் அவர்கள் மறைவு குறித்து. மெல்லிசை மன்னர் என்றும் எம்.எஸ்.வி. என்றும் அன்புடன் அழைக்கப்படுபவரும், தமிழ்த் திரையுலகில் மாபெரும் சகாப்தமாகத் திகழ்ந்தவரும், தனது ஈடு இணையற்ற இசை வல்லமையால் தமிழ்த் திரையுலகத்தினருக்கும், குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களுக்கும் பெருமை சேர்த்தவரும், பழம்பெரும் இசையமைப்பாளருமான திரையுலக இசை மேதை திரு. எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் உடல் நலிவுற்று, 14–7–2015 அன்று மருத்துவமனையில் காலமானார் என்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.